

பாமாலை 109 D மரிக்கும் மீட்பர் ஆவியும்

1 மரிக்கும் மீட்பர் ஆவியும்,
வதைக்கப்பட்ட தேகமும்,
என் ஆவி தேகம் உய்யவே
என்றைக்கும் காக்கத் தக்கதே

2 அவர் விலாவில் சாலவும்
வடிந்த நீரும் ரத்தமும்
என் ஸ்நானமாகி, பாவத்தை
நிவிர்த்தி செய்யத் தக்கதே

3 அவர் முகத்தின் வேர்வையும்
கண்ணீர் அவஸ்தை துக்கமும்,
நியாய த் தீர்ப்பு நாளிலே
என் அடைக்கலம் ஆகுமே

4 அன்புள்ள இயேசு கிறிஸ்துவே
ஒதுக்கை உம்மிடத்திலே
விரும்பித் தேடும் எனக்கும்
நீர் தஞ்சம் ஈந்து ரட்சியும்

5 என் ஆவி போகும் நேரத்தில்
அதை நீர் பரதீசினில்
சேர்த்தென்றும் உம்மைப் போற்றவே
அழைத்துக் கொள்ளும், கர்த்தரே